அ.வ.எண்: 173/2015 நாள்:13.02.2024

வா.சா.2. ராஜவேல் (கிராம நிர்வாக அலுவலர், மரூர்)

1,3,4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1) நான் எந்த தேதியில் மரூர் கிராம நிர்வாக அலுவலராக பணியேற்றுக் கொண்டேன் என்றால் 01.09.2023 அன்று பணியில் சேர்ந்தேன். எனக்கு 06.02.2024 அன்று நீதிமன்றத்தில் இருந்து வந்த சம்மனில் என்ன கண்டுள்ளது என்றால் வாய்மொழி சாட்சி அழைக்க மட்டும் என்று உள்ளதா என்றால் ஆமாம். மேற்படி அழைப்பாணையில் சொத்து விவரம் பற்றிய எந்த ஒரு விபரமும் இல்லை என்றால் சரிதான்.

2) நான் அளித்த முதல் விசாரணை வாக்குமூலம் அனைத்தும் வருவாய் ஆவணங்களின் மூலம் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட அழைப்பாணையை பெற்றுக் கொண்ட பிறகு சம்பந்தப்பட்ட தாவா இடத்தில் சென்று ஆய்வு மேற்கொண்டேனா என்றால் ஆய்வு மேற்கொண்டேன். எந்த தேதியில் ஆய்வு நடத்தினேன் என்ன என்ன ஆய்வு நடத்தினேன் என்று ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

3) மரூர் கிராமம் புல எண். 7/2 நஞ்சை நிலம் சம்மந்தமாக வாதி என்னிடம் என்ன சொன்னார் என்றால் 2 ஆம் பிரதிவாதி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் மேற்படி புல எண் சம்மந்தமாக சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொன்னார். சாட்சியம் அளிக்க வட்டாட்சியரிடம் அனுமதி பெற்றேனா என்றால் வாய் மொழியாக பெற்றுள்ளேன். மேற்படி வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாமல் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**மறுவிசாரணை:**

அழைப்பாணையுடன் தாவா சொத்து விவரம் அடங்கிய மனு இணைத்து அனுப்பப்பட்டது என்றால் சரிதான்.

/ஒ.ம்./

பெ. சந்திரசேகர், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருவையாறு.